செய்தி வெளியீடு எண்:1004 நாள்:01.11.2021

## செய்தி வெளியீடு

## மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களுடன் ஒன்றிய நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் திரு.S.மண்டல் ஆலோசனை

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடன் இன்று (1.11.2021) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் செய்துவரும் தேசிய நெடுஞ்சாலை பணிகளின் முன்னேற்றம் குறித்து விவாதித்தார்கள்.

இந்த, விவாதத்தில் சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீட்டில், தமிழ்நாட்டில் நடைபெறும் மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் தொடர்பாக, ஆலோசனை நடத்தினார். இந்த, ஆலோசனையின் போது ஒப்பந்ததாரர்களின் கோரிக்கைகள், ஒப்பந்தப் பணிகளின் காலதாமதம், வெளிமாநில ஒப்பந்ததாரர்களால், ஏற்படுகின்ற பிரச்சனைகள் போன்றவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும், குடியாத்தம், திருவையாறு, அச்சம்பத்து, பாகலூர் ஆகிய நகரங்களில் புறவழிச்சாலை இந்தாண்டே அமைப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலை பணிகளில் உள்ள மின் கம்பங்களை விரைந்து மாற்றி அமைப்பதன் மூலம் சாலை அமைக்கும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும். இப்பணிக்கு முன்னுரிமை அளித்து டிசம்பர் 2021 மாதத்திற்குள் மின் கம்பம் மாற்றும் பணிகள் முடிவுப் பெற செய்ய வேண்டும் என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த ஆலோசனையில் திரு.S.C. மண்டல், தலைமைப் பொறியாளர் (மண்டலம் - 3), ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை

அமைச்சகம், புது டெல்லி, திரு. ரனஞ்சய் சிங், மண்டல அலுவலர், ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், சென்னை மற்றும் திரு. ந. பாலமுருகன், தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சென்னை ஆகியோர் பங்கு பெற்றனர்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9